Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I. TIRUPATTUR
Case No STC.NO.894/2024
DEPOSITION OF COMPLAINANT SIDE EVIDENCE No.1 Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கர் | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | மாணிக்கம் | தொழில் | விவசாயம் |
| கிராமம் | செவ்வாத்தூர் | மதம் | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | வயது | 54 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 )on the 09th day of April 2025.
சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை.-** ( எதிரி ஆஜர்)

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்கிறேன். எனது முதல் விசாரணையை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். நான் படித்து பாரத்துதான் கையொப்பம் செய்தேன்.

1) 14.09.2023 தேதியிட்ட குற்றம்முறையிடுபவருக்கு, குற்றம் சாட்டப்பட்டவர் வழங்கிய உஜ்ஜீவன் சிறு நிதி வங்கி கிளையின் காசோலை எண்.883604 அசல் பு.த.சா.ஆ.1

2) 15.09.2023 தேதியிட்ட EQUITAS வங்கி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.2

3) 13.12.2023 தேதியிட்ட EQUITAS வங்கி கிளையில் வழங்கிய ரிட்டன் மெமோ பு.த.சா.ஆ.3

4) 10.10.2023 தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் குற்றம்சாட்டப்பட்டவருக்கு தனது வழக்கறிஞர் மூலம் அனுப்பிய சட்ட அறிவிப்பின் நகல் பு.த.சா.ஆ.4

5) 10.10.2023 தேதியிட்ட குற்றம் முறையிடுபவர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பினை எதிரி வாங்க மறுத்த பதிவு அஞ்சல் கவர் பு.த.சா.ஆ.5

6) 14.12.2023 தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பின் நகல் பு.த.சா.ஆ.6

7) 15.12.2023 தேதியிட்ட குற்றம்முறையிடுபவர் எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பினை எதிரி வாங்க மறுத்த பதிவு அஞ்சல் கவர் பு.த.சா.ஆ.7

புகார்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பு வழக்கிறஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.